<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 66/2019 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | மாரியம்மாள் | நாள் | 04.12.2024 |
| கணவர் பெயர் | பாலகிருஷ்ணன் | | |

**<u>வாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

5) விஸ்வநாதன் எனக்கு என்ன உறவு என்றால், என் இளைய சகோதரர் ஆவார். வாதிகளின் நிலம் எவ்வாறு அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. வாதிகள் தற்போது எவ்வளவு நிலத்தில் குடியிருக்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. எந்த சர்வே எண்ணில் குடியிருக்கிறார்கள் என்றால், சர்வே எண் எனக்கு தெரியாது.

6) ஏற்கனவே எங்கள் குடும்பத்தில் 1964 ல் பாகபிரிவினை ஏற்பட்டதாகவும், அதில் என்னை ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை எனவும், நான் சொல்லியுள்ள நிலையில், மேற்படி சமயத்தில் நான் பிறக்கவில்லை என்பதால்தான் என்னை அதில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால், அப்போது நான் பிறந்திருந்தேனா என்பது குறித்து எனக்கு சரியாக நினைவில்லை. என் சகோதரர் விஸ்வநாதனுக்கு நான் எத்தனை வருடங்களுக்கு மூத்தவர் என்றால், மூன்று வருடங்களுக்கு மூத்தவர். தற்போது எனக்கு என்ன வயது என்றால், சுமார் 59 வயது இருக்கும். என் சகோதரர் விஸ்வநாதனுக்கு தற்போது என்ன வயது என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

7) என்னுடைய சகோதரர்கள் நாராயணசாமி மற்றும் அங்கமுத்து ஆகியோர்களிடம் நிலம் வாங்கிய அங்கமுத்து மனைவி பொன்னாயாள் என்பவரை எனக்கு தெரியுமா என்றால், தெரியும். ஆனால், அதிக பேச்சுவார்த்தை இல்லை. மேற்படி பொன்னாயாள்

மேற்படி என் சகோதரரின் மனைவி என்றால், சரிதான். மேற்படி பொன்னாயாளுக்கு 1994ம் வருடத்தில் ச.எண்.362/5ல் உள்ள நிலத்தை நாராயணசாமி, அங்கமுத்து, மாரிமுத்து ஆகியோர் சேர்ந்து கிரயம் கொடுத்துள்ளனர் என்றால், அந்த விவரம் எனக்கு தெரியாது.

8) மேற்படி பொன்னாயாள் கிரயம் பெற்ற நிலத்தை சுற்றி சின்னய்யன், அங்கமுத்து, வைத்தியலிங்கம் ஆகியோர்களின் பாக நிலங்களும் மற்றும் நங்கவள்ளி மெயின்ரோடும் சக்குபந்திகளாக அமைந்துள்ளது என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி நாராயணசாமி என்னுடைய சகோதரர் என்றால், சரிதான். அவருக்கு பெரியண்ணன், கவிதா என இரு வாரிசுகள் உள்ளனர் என்றால், சரிதான். மேற்படி விஸ்வநாதனுக்கு சந்தியாதேவி என்ற மகள் உள்ளார் என்றால், சரிதான்.

9) என் சகோதரர் நாராயணசாமி மற்றும் சின்னய்யன் ஆகியோருடன் தற்போது எனக்கு பேச்சுவார்த்தை உள்ளதா என்றால், எப்போதாவது பேசிக்கொள்வோம். மேற்படி நபர்கள் அனைவரும் சேர்ந்துதான் 1994ல் பொன்னாயாளுக்கு பாகசொத்துக்களை கிரயம் கொடுத்த விவரம் எனக்கு தெரிந்திருந்தும், அது குறித்து தெரியாது என தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. பெருமாள் மனைவி சரோஜா என்பவரை எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

10) மேற்படி சரோஜாவிற்கும், விஸ்வநாதன் தன் மைனர் மக்களுக்காகவும் மற்றும் அவரது மனைவியும் சேர்ந்து 08.05.2003ம் தேதியில் ச.எண்.362/5ல் 0.21–1/2 சென்ட் நிலத்தை விற்பனை செய்துள்ளனர் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி நிலம் தாவா சொத்தை ஒட்டி வடக்கு, மேற்கு பக்கங்களில் அமைந்துள்ளது என்றால், அது குறித்தும் எனக்கு தெரியாது. தற்போது தாவா சொத்தை ஒட்டி தெற்குபுறமாக விஸ்வநாதன் நிலம் அமைந்துள்ளது என்றால், சரிதான். ஆனால்,

அதை அவர் விற்கவில்லை. மேற்படி சரோஜாவிற்கு விற்பனை செய்தது குறித்து எனக்கு தெரியும் என்றாலும், ஆனால், வழக்கிற்காக தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

(வாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.